பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 14 (27—3—68) புதன் ★ வெளியூர்: பங்குனி 15 (28—3—68) வியாழன் [இதழ்: 238

கட்சித் தோழர்கள் வீட்டில் விருந்துண்பது தவறு?

முன்னாள் அமைச்சர்கள் முதலாளிகள் வீட்டில் விருந்துண்டார்களா?

சட்டமன்றக் கேள்விக்கு அறிஞர் அண்ணா பதில்

சென்னை, மார்ச் 27—

"சில மணி நேரம் மட்டும் மணம் பரப்பிடும் மலர் மாலைகளைத் தவிர, விலையுயர்ந்த பரிசுப் பொருள் எதுவும் அமைச்சர்கள் பெறுவதில்லை"

என்று இன்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

அமைச்சர்கள் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள்பற்றி கேட்கப்பட்ட கேள்வியையொட்டி எழுந்த துணைக் கேள்விக்கே அண்ணா அவர்கள் இவ்விதம் பதிலளித்தார்.

"இப்போது நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகள், முந்திய அரசால் 1965-ல் அறிவிக்கப்பட்டவையாகும்; இந்த அரசு கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றி மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது"

என்றும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

"அமைச்சர்களின் சொத்து விவரம் தரப்படவேண்டும் என்பதில், முழு மேற்பார்வை அதிகாரமும் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்ளவில்லை; அது தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:—

"'அமைச்சர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுப் பொருள்கள், ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் (அதாவது ரூ 300 என்று நினைக்கிறேன்) இல்லாமல் இருந்தால், அதை அமைச்சர்களே வைத்துக் கொள்ளலாம்; அதற்குமேல் இருந்தால், அந்தக் குறிப்பிட்ட தொகைக்கும்—அந்தப் பரிசுப் பொருளின் விலை மதிப்புக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை, அமைச்சர்கள் அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்பது விதி. நமது அமைச்சர்களுக்கு அப்படி விலை உயர்ந்த பொருள்கள் கொடுக்கப்படுமானால், அவற்றை அவர்களே அரசிடம் ஒப்படைத்துவிடுவார்கள்.

"கட்சித் தோழர்கள் வீட்டிலோ, தனிப்பட்ட பிரமுகர்கள் வீட்டிலோ அமைச்சர்கள் விருந்து உண்பது என்பது, யாருக்கும் ஆதாய நோக்கமில்லாதிருக்குமானால், அப்படிப்பட்ட விருந்து உண்பதிலோ, அவர்களோடு நெருங்கிப் பழகுவதிலோ தவறில்லை. கூடியவரையில், அமைச்சர்கள் கட்சித் தோழர்கள் வீட்டுக்கோ, பிற தனிப்பட்டவர்கள் வீட்டுக்கோ போகாமலிருப்பது நல்லது.

'அமைச்சர்கள் புதிதாகப் பதவி ஏற்றவுடன், விருந்துக்கு அழைப்பது—வரவேற்பு அளிப்பது—என்பது அதிகமாக இருந்திருக்கும்; ஆனால், பிறகு அப்படி இருக்காது; போகப்போகக் குறைந்துவிடும்.

"அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விருந்தின் தன்மையைப் பற்றி ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கட்சித் தோழர் ஒருவர், ஊராட்சி மன்றம் அல்லது ஒன்றியத்தின் தலைவராக இருந்து—பள்ளிக் கட்டிடக் குழுத் தலைவராகவும் இருந்து—அந்தக் கட்டிடத் திறப்பு விழாவுக்கு அமைச்சர் அழைக்கப்பட்டுக் கலந்து கொண்டால், அந்த நேரத்தில், விழா முடிந்ததும் அந்தக் கட்சித் தோழரின் அழைப்பை ஏற்று அவர் வீட்டில் அமைச்சர் விருந்து உண்பது தவறு இல்லை; அப்போது, 'விருந்துக்கு வரமாட்டேன்' என்று அமைச்சர் சொன்னால், அது, 'சரி' என்று எதிர்க் கட்சி நண்பர் விநாயகம் கூட ஒப்புக்கொள்ளமாட்டார்."

எம். எஸ். மணி:—"முந்திய அரசில் இருந்த அமைச்சர்கள், 'முதலாளிகள் அழைத்தால் விருந்துக்குச் சென்றார்கள்; கட்சித் தொண்டர்கள் அழைத்தால் செல்வதில்லை; என்ற புகார் இருந்தது; இப்போதுள்ள அமைச்சர்கள், 'கட்சித்தொண்டர்கள் வீடுகளுக்குச் சென்று விருந்து உண்கிறார்கள்' என்று புகார் கூறப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?"

அண்ணா:—"முந்திய அரசின் அமைச்சர்கள், முதலாளிகள் வீட்டிற்குச் சென்று விருந்து உண்டார்களா என்பது எனக்குத் தெரியாது. பரவலாக அப்படி ஒரு கருத்து பேசப்பட்டு வருகிறது. அன்றைய அமைச்சர்களை முதலாளிகள் அழைத்தார்களா என்ற தகவல் இந்த அரசிடம் இல்லை,"

பரீட்சை முறையில் மாற்றமில்லை!

சென்னை, மார்ச் 27—

"எஸ். எஸ். எல். சி. முதல் கல்லூரிப் படிப்பு வரை கேள்வித்தாட்களை முன்கூட்டியே கொடுத்துவிட்டுப் புத்தகங்களையும் பார்த்துப் பரீட்சை எழுதும் முறையைச் செயல்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

என். சி. சி.-யில் இந்தி இருந்தே தீரும்?

பாதுகாப்பு அமைச்சகத்தின் இறுமாப்பு!

"'நேஷனல் கேடட் காப்ஸ்' என்னும் மாணவர் இராணுவப் பயிற்சி அமைப்பில் உள்ள கட்டளைச் சொற்களை இந்தியிலிருந்து ஆங்கிலத்துக்கு மாற்றும் உத்தேசம் இல்லை"

என்று பாதுகாப்பு அமைச்சகம் கருதுவதாக, ஆங்கில நாளிதழ் ஒன்றின், புதுடில்லி சிறப்பு நிருபர் மூலம் தெரிவித்துள்ளார்.

இதனால், 'ஆங்கிலத்தில் மட்டுமே கட்டளைச் சொற்கள் இருக்க வேண்டும்' என்று விரும்பியிருக்கும் மாநிலங்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது!

"இருந்தால், கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கட்டும்; இந்தியில் தான் இருக்குமென்றால் என். சி. சி.-யே தேவையில்லை" என்று தமிழக அரசு தெரிவித்திருக்கும் கருத்தினையும் புதுடில்லி மறுத்திருக்கிறது என இதனால் பொருள்படுகிறது.

போலீசார்மீது துப்பாக்கிச் சூடு

மூன்று பேர் மரணம்!

குசராத்தில் சம்பவம்

அகமதாபாத் நகருக்கு 15 மைல் தூரத்தில் உள்ள சிற்றூருக்கு, 'வாரண்டு' ஒன்றினைச் சேர்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்த போலீசுக் குழுமீது சிலர் சுட்டதால், இரண்டு அதிகாரிகளும், ஒரு கான்ஸ்டபிளும், அந்த இடத்திலேயே மாண்டிருக்கின்றனர்.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் கல்வித்தரம் குறைந்துவிட்டது

காங்கிரசு உறுப்பினரின் குற்றச்சாட்டு!

வல்லுநர்களைக் கலந்தே புதிய அரசு செயல்படுவதாக அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 27—

"'கல்வித் துறையில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது' என்பதே இந்த அரசின் நோக்கம். நான் பதவியேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் கல்வித் தொடர்பான எந்தக் காரியத்தையும் கல்வித்துறை வல்லுநர்களைக் கலந்தாலோசித்தே செய்து வந்திருக்கிறேன்; எதையும் நானாகவே புகுத்தவில்லை; ஆனால், 'கல்விமுறை எப்படியிருக்கவேண்டும்—எப்படி இருந்தால் நலம் பயக்கும்' என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லும் உரிமை இந்த மன்றத்திற்கு இருக்கிறது; இந்த மன்றத்தின் கருத்தையும் கேட்டுத்தான் நான் செயலாற்றுகிறேன். சனநாயகத்தில் மக்கள் விருப்பமறிந்து, அவர்கள் என்ன செய்யவேண்டும் என்கிறார்களோ அதனைச் சொல்ல நமக்கு உரிமை இருக்கிறது. கல்வி முறை எப்படி வகுக்கப்பட வேண்டும் என்பதை வல்லுநர்களைக்கொண்டே செய்கிறோம்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கே. விநாயகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இன்று சட்டமன்றத்தில் விளக்கமளித்தார்.

"கல்வியமைச்சர் மாறும் போதெல்லாம் கல்வித் திட்டம் மாறுவதால், கடந்த இருபதாண்டுக் காலமாகக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது" என்று சுட்டிக்காட்டி, 'இனியேனும் கல்வித் திட்டத்தில் மாறுதல் செய்யாதிருக்குமா அரசு?' எனக் கேட்டார் திரு. விநாயகம்; அதற்குத்தான் அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

குமரி மாவட்டத்தில் பாசன நீர்ப் பற்றாக்குறை

சமாளிக்க அரசு நடவடிக்கை

சென்னை, மார்ச் 26—

"தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 2,000 ஏக்கர் அளவில் பயிர் நிலங்கள் 'சாவி'யாகும் நிலையில் உள்ளன; கிடைக்கக்கூடிய தண்ணீர் வசதியை, முறைபோட்டுப் பாய்ச்சிப் பயிரைக் காப்பாற்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன"

என்று உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

திருச்சி மாவட்டத்தில்

"திருச்சி மாவட்டத்தில் அரியலூர் தாலுகாவில், 25,454 ஏக்கர் பரப்புள்ள நிலம், உப்புச் சத்து மிகுந்துள்ளதன் காரணமாகத் தரிசாகக் கிடக்கிறது" என்றும் அமைச்சர் சொன்னார்.

இரு பம்பாய்ச் செய்திகள்!

தோல்வியை நோக்கி சிவசேனை!

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வரை எண்ணப்பட்ட பம்பாய் நகராட்சித் தேர்தல்களில் காங்கிரசு பெரும்பான்மையாகவும், சிவசேனை தோல்விப் படலத்தை நோக்கி போய்க் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன!

தாராவிப் பகுதியில் குடிசைகள் தீக்கிரை!

செவ்வாய்க்கிழமை நடுப்பகல் 12-30 மணியளவில், வடக்கு பம்பாய் தாராவிப் பகுதியில் மூண்ட தீவிபத்தினால், 300 குடிசைகள் எரிந்து சாம்பலாகியுள்ளன!

'ஐயா'வா — 'அம்மா'வா?

மக்களவையில் ஒரு வேடிக்கை!

திருமதி இலட்சுமிகாந்தம்மா என்னும் உறுப்பினர், கடந்த செவ்வாயன்று, தற்காலிகமாக மக்களவைத் தலைவர் பொறுப்புக்களைக் கவனித்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

செய்திப்படத்தில் செஞ்சிக் கோட்டைக்கு இடமில்லை?

'பல்லவமேடு பற்றி ஆராயப்பட்டதா?'---- சட்டமன்றத்தில் கேள்விகள்

சென்னை, மார்ச் 26—

"தேசிங்கு மன்னனால் கட்டப்பட்ட செஞ்சிக்கோட்டை, இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பாதுகாப்பில் உள்ளது; பாதுகாக்கப்படவேண்டிய தேசியச் சின்னமாக அது பேணி வரப்படுகிறது; அதில் இப்போது பழுதேதும் ஏற்படவில்லை; நல்ல நிலையிலேயே உள்ளது; ஏற்கனவே பழுதுபார்க்கப்பட்டுவிட்டது; செடி, கொடிகளை அகற்றும் வேலை மட்டும் அவ்வப்போது செய்யப்படுகிறது,"

என்று, கல்வி—தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஆர். ஆர். முனுசாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

கா. வேழவேந்தன்:— "இந்திய அரசினர் தயாரித்து வெளியிடும் செய்திப் படங்களில் செஞ்சிக் கோட்டை காட்டப்படவில்லை; எனவே, செஞ்சிக்கோட்டையையும் செய்திப் படமாக எடுத்து இந்தியா முழுவதிலும் காட்ட வழி செய்யப்படுமா?"

அமைச்சர்:— "செஞ்சிக் கோட்டையைப் படம் எடுத்தார்களா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை. அப்படி இதுவரையில் படம் எடுக்காமலிருந்தால், அதற்கு ஆவன செய்யப்படும்."

எஸ். ஜே. இராமசாமி:—"காஞ்சிபுரத்திலுள்ள பல்லவமேடு என்ற இடத்தை, தொல்பொருள் ஆய்வுத்துறையினர் ஆராய்ந்து பார்த்தனரா? இல்லையென்றால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர்:—"பல்லவமேடு பற்றியும் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆராய்ந்திருக்கின்றனர்; ஆனல், அதுபற்றிய விவரம் இப்போது கைவசமில்லை."

மக்கள் தொகையை அதிகரிப்பது எப்படி?

ஆஸ்திரேலியாவின் தலையாய பிரச்சினை!

"இப்போதிருப்பதைப்போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு அளவில் மக்கள் தொகை அதிகரிக்க வேண்டும்" என்ற நிலையில் இருக்கிறது ஆஸ்திரேலியா!

"சுமார் 12 மில்லியன் மக்கள் மேலும் தோன்றினல்தான், ஆஸ்திரேலியாவின் இயற்கை வளங்களைப் போதிய அளவுக்குப் பயன்படுத்த முடியும்—தொழில் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்ற நிலையில் அந்த நாடு இருக்கிறது"

என, சமுதாயத் துறை அமைச்சர் வில்லியம் வெண்ட் வொர்த் கூறியுள்ளார்.

இத்தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"மக்கள் பிறப்பு ஆஸ்திரேலியாவில் மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. திருமணமாகியிருக்கும் இளம் தம்பதிகளின் வாழ்க்கைத்தரம், மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதுதான் இதற்குக் காரணம். மக்கள் தொகையை மேலும் அதிகரிப்பது எப்படி என்பது பற்றி ஆஸ்திரேலியா மிகத் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

"வெளி நாடுகளிலிருந்து வருபவர்களை ஊக்குவித்து, அத்தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்ற கருத்தும் இருக்கிறது."

வெள்ளித் திரையில் வெள்ளையும் கறுப்பும்!

[எஸ். ஆர்.]

I.M.P.A., F.P.G. என்ற திரைப் பட உற்பத்தியாளர்கள் அடங்கிய இரண்டு குழுக்கள், கடந்த ஞாயிறன்று சென்னைக்கு வந்து, இங்குள்ள இந்திப் படத் தயாரிப்பாளர்களிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தி சில முடிவுகளையும் எடுத்திருக்கிறது; அதன்படி,

இந்திப் பட விநியோகத்தினை உடனடியாகவும்—

இந்திப் படத் தயாரிப்பினை வருகிற 31-ந் தேதி முதற்கொண்டும்—

நிறுத்திவிடுவதென சென்னையில் உள்ள இந்திப் படத் தயாரிப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேலே கூறப்பட்ட திரைப் படத் தயாரிப்பாளர்கள் குழு இரண்டும், பெரும் பகுதி பம்பாய் தயாரிப்பாளர்களைக் கொண்டதாகும்.

அதுமட்டுமல்ல; அதிலும் பெரும் பகுதியினர் இந்திப் படத் தயாரிப்பாளர்களாவர்!

தமிழ்ப் பட உலகத்தினர் எப்படி இந்திப் படத் தயாரிப்பிலும் இறங்கியிருக்கிறார்களோ அப்படி, மராத்தி மொழி தயாரிப்பாளர்கள்—வங்காளி மொழி தயாரிப்பாளர்கள்—இன்னும் மற்ற மற்ற மொழிக்காரர்களும் இந்திப் படங்களைத் தயாரித்து வருகின்றனர்.

இந்திப் படமென்பது இந்திக்காரர்களால் மட்டும் தயாரிக்கப்படுவதன்று; சரியாகச் சொல்வதென்றால், பெரும் பகுதி இந்தி பேசாத பகுதியான சென்னை—பம்பாய் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன!

இந்திப் படங்களின் ஒரு உற்பத்திக் களமாக இருப்பதில் முதலில் வருவது பம்பாய்!

இவையெல்லாம், இந்திப் படத் தயாரிப்புகளைப் பற்றிய சில அடிப்படைச் செய்திகள்!

பம்பாயில், திரைப் படத் தொழிலுக்கு ஒரு நெருக்கடி வந்திருக்கிறது!

'சிவசேனை'யினர் நடத்தும் எதிர்ப்புக்கும்—இந்த நெருக்கடிக்கும் எள்ளளவுத் தொடர்பும் கிடையாது!

'சிவசேனை' எதிர்ப்புக்கு முன்பாக—நெடுநாட்களாகப் பம்பாய் திரைப் பட உலகில் நிலவிவந்த சில பல நிலைமைகள், இப்போது நெருக்கடியாக வளர்ந்துள்ளன!

பட உற்பத்தியாளர்கள் — விநியோகிப்பவர்கள் — திரையிடும் தியேட்டர் சொந்தக்காரர்கள்—ஆகிய முத்தரப்பினரிடையே பம்பாய் மார்க்கெட்டில், ஒரு கருத்துவேறுபாடுஎழுந்துள்ளது!

அதன்படி, விநியோகிப்பவர்களும் — திரையிடுபவர்களும் சேர்ந்துகொண்டு, உற்பத்தியாளர்களின் இலாபங்களையெல்லாம் 'அபகரித்துவிடுகிறார்கள் என்றும், திரைப் படங்களின் மூலம் வரும் வருவாய், உரிய அளவுக்குக்கூடத் தயாரிப்பாளர்களுக்குக் கிடைப்பதில்லையென்றும், அங்கு உள்ள இந்திப் படத் தயாரிப்பாளர்கள் கருதுகிறார்கள்! இதற்குத் திரைப் பட நடிகர்களும் ஆதரவு தருகின்றனர்!

விநியோகிப்பவர்கள் — திரையிடுபவர்கள் ஆகிய இருவரும், முறையே, 'திரைப் படங்களுக்கான விநியோக—திரையிடும் கட்டணங்களை இன்னும் அதிகமாக்கித் தரவேண்டும்' என்று திரைப் பட உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டதற்குச் சரியான பதில் வராத காரணத்தால், இந்திப் பட விநியோகம் — தயாரிப்பு ஆகிய இரண்டினையும் நிறுத்திவிடுவதெனத் தயாரிப்பாளர்கள் முடிவு செய்துள்ளனர்!

இதன்படி, மார்ச் 14-ந் தேதி முதலே இந்திப் படங்களின் புதிய பதிப்புக்கள் ஏதும் தயாராகவில்லை!

புதிய படத் தயாரிப்பும், வருகிற 31-ந் தேதிமுதல் நிறுத்தப்படவிருக்கிறது!

இதற்கு, தமிழகத்து இந்திப் படத் தயாரிப்பாளர்களையும் சம்மதிக்கச் செயவதற்குத்தான் பம்பாய் படத் தயாரிப்பாளர்கள், கடந்த ஞாயிறன்று சென்னையில் கூடிப் பேசி வெற்றியும் கண்டிருக்கின்றனர்!

பம்பாயிலும், மற்றும் ஒரிரு வடக்கத்திய நகரங்களான கல்கத்தா—டெல்லி—கான்பூர்முதலியஇடங்களிலுமுள்ள பட விநியோக நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்—தியேட்டர் உரிமையாளர்கள் ஆகியோரை, தங்களுக்கு இலாபம் சரிவரக் கிடைக்கும் வகையில் அவர்களைப் 'பணிய' வைப்பதற்காக இந்திப் பட உற்பத்தியாளர்கள் எடுத்துள்ள ஒரு முயற்சி இது!

இதற்கு, 'இந்திப் படத் தயாரிப்பாளர்கள்' என்ற முறையில், சென்னையிலுள்ள தயாரிப்பாளர்களும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்!

'தமிழ்ப் படத்துறைக்கு இந்த நெருக்கடி இல்லை' என்பதனை, பம்பாயிலிருந்து வந்திருக்கும் குழுவின் தலைவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்!

ஆனாலும், 'பம்பாயில் உள்ள தியேட்டர் சொந்தக்காரர்களை—விநியோக நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை 'பணிய' வைப்பதற்காகத் தமிழகத்து இந்திப் படத் தயாரிப்பாளர்களின் உதவியும் தேவைப்படுகிறது' என்ற காரணத்துக்காக அக்குழு, இங்கேயும் வந்து கலந்துரையாடி, வெற்றியுடன் திரும்பியிருக்கிறது!

'படத் தொழிலுக்கு நெருக்கடி' என்றவகையில், சிவசேனையினர் எழுப்பியிருக்கும் வேற்றுமை உணர்ச்சியினைவிட இந்தப் பிரச்சினை, பெரிய ஒன்றாக இருக்கலாம்!

ஆனாலும், தமிழகத்தில் உற்பத்தியாகும் இந்திப் படங்களுக்கு, வட்டார உணர்வில் வேற்றுமை — விபரீதத்தினை முதன்முதல் கிளப்பிவிட்ட சிவசேனை ஆர்ப்பாட்டத்துக்கு, 'தொழில் துறையினர்' என்ற முறையில், 'I. M. P. A.'—'F. P. G,' என்ற தயாரிப்பாளர்கள் சங்கம் இரண்டும் எடுத்துக்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன?

சென்னையில், அச்சங்கத்தின் தலைவர் 'சிப்பி' என்பவரை செய்தியாளர்கள் இதுபற்றிக் கேட்கவும் தவறவில்லை; ஆனல், அதற்குரிய பதிலைச் சொல்லுவதில், 'சிப்பி' தவறியிருக்கிறார்—தவறு இழைத்திருக்கிறார்!

"சென்னையில் உற்பத்தியாகிறது என்பதற்காக மராட்டியத்தில் ஏன் தமிழகத்து இந்திப் படங்களுக்கு எதிர்ப்பு?"

என்று கேட்ட நிருபர்களுக்கு

"அதற்கு எங்கள் சங்கம் காரணம் அல்ல—பொறுப்பு அல்ல; சிவசேனையினர்தான் பொறுப்பு—காரணம்"

எனப் பதிலளித்திருக்கிறார் அவர்!

"திரைப் படம் ஒரு கலை; அரசியலுக்கும்—அதற்கும் தொடர்பு கிடையாது"

எனக் கூறியிருக்கும் சிப்பி,

தமிழகத்து இந்திப் படங்களுக்கு அவரது நகரில் இருக்கும் எதிர்ப்புக்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம் எழுந்த ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன?

பெரும் பகுதி பம்பாய்க்காரர்களைக் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு உரிய இலாபத்தில் இழப்பு ஏற்படுகிறது என்ற காரணத்துக்காக, இங்கே உள்ள சில இந்திப் படத் தயாரிப்பாளர்கள், அவர்களுடைய முடிவுக்கு ஒப்புதல் தெரிவித்திருக்கும் பெருந்தன்மை உணர்ச்சியினைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தினை 'சிப்பி' பெற்றிருப்பாரா என்பது சந்தேகமே!

தொழில்துறைத் தோழமைக்குக் கட்டுப்பட்டு பம்பாய்க்காரர்களின் முடிவுகளுக்கு ஒப்புதல் தந்திருக்கும் பெருந்தன்மைக்கு இடையிலும், தமிழகத்து இந்திப் பட உற்பத்தியாளர்கள், ஒன்றினைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழகத்து இந்திப் படங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு தேக்க நிலைக்கு வழிவகை காண்பதில் மனமார்ந்த ஒத்துழைப்பு தராமல், அதற்கு முன்பாக—பெரும் பகுதியினர் பம்பாய்க்காரர்கள் என்பதால்—தங்கள் தொழிலுக்கு வந்துள்ள ஆபத்தினைப் போக்கிக்கொள்ள அவசர அவசரமாக இங்கே வந்து கலந்து பேசி வெற்றியும் பெற்றுத் திரும்பும் அந்தத் தயாரிப்பாளர்களின் தொழில்துறை நெஞ்சத் தூய்மையினை இனியேனும் நமது இந்திப் பட உற்பத்தியாளர்கள் எடைபோட்டுப் பார்ப்பது நல்லது!

இங்கே நமது மாணவர்கள், 'இந்திப் படங்களுக்கு எதிர்ப்புக் காட்டுகிறார்களே' என்று சுலபத்தில் திருப்பிக் கேட்டு, எவரும் திசை திருப்பிவிட வேண்டாம்! மாணவர்களின் இந்தப் போக்கினை, 'சரி' என அப்படியே ஒப்பிவிடுவதாகவும் பொருள் கொண்டுவிடக் கூடாது!

இங்கே இந்திப் படங்களுக்கு உள்ள எதிர்ப்பு மத்திய அரசின் மொழிக் கொள்கையில் உள்ள ஆபத்தினால் விளைந்தது!

பம்பாய் இந்திப் பட மார்க்கெட் என்பது எப்படி இந்தி மொழிக்காரர்களை மட்டும் கொண்டதில்லையோ, அதுபோல் இங்கே இந்திப் படங்களுக்கு மாணவர்கள் காட்டுவதாகச் சொல்லப்படும் எதிர்ப்பு, பம்பாய்த் திரை உலகத்துக்கு எதிரானது அல்ல!

ஆனல், சிவசேனையினரின் எதிர்ப்பு, மொழிக் கொள்கையின்பாற்பட்டதல்ல! வெளிப்படையாக இதனைச் சிலர் மறுக்கலாம்; ஆனல், உள்நோக்கம் என்ன என்பது, உணர்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும்!

இங்கே மாணவர்கள் காட்டும் எதிர்ப்பினல், தமிழகத்து இந்தித் தயாரிப்பாளர்களுக்கு நேரிடும் நட்டக் கணக்கினை, சில நாட்களுக்கு முன்னர், புள்ளி விவரத்துடன் எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினர்!

இப்போது, தொழில்துறை நெருக்கடிக்காக, தமிழகத்து இந்திப் படத் தயாரிப்பாளர்களே முன்வந்து, பம்பாய்த் திரைப் படத் தயாரிப்பாளர்களுக்குச் சாதகமாக 'தயாரிப்பு நிறுத்தம்' மேற்கொண்டிருக்கின்றனர்!

'இதனல் மட்டும் நட்டம் வராதா' என்று அவசரப்பட்டு கேட்கும் அளவுக்குப் பக்குவம் அற்றவர்களாக இல்லை—மக்கள்!

இருந்தாலும், நமது உற்பத்தியாளர்கள் காட்டியிருக்கும் பெருந்தன்மையின் மூலமாகவாவது, அவர்களுக்குப் பம்பாய் திரைப்பட உலகில் தனித்து வந்திருக்கும் நெருக்கடி தீருமா என்பதுதான் அனைவரது கவனத்துக்கும் உரியதாக இருக்கிறது!

மரியாதையோ, பெருந்தன்மையோ ஒரு வழிப் பாதையாக இருப்பதில் பயனில்லை! தரவும்—பெறுவதுமாக அது இருக்கவேண்டும்!

நீரையும் நெருப்பையும், நன்மையையும் தீமையையும், நல்லவரையும் கெட்டவரையும் நிழலாகக் காட்டும் வெள்ளித் திரையில் இரு தரப்பாரிடையே இருக்கும் நிலைமை இது!

'மொழிப் பிரச்சினை' என்ற ஒன்றுக்கு அப்பாற்பட்டு, வெள்ளையும் கறுப்புமாகப் புரிந்து கொள்ளவேண்டிய—தெரிந்து கொள்ளவேண்டிய—உண்மைகள் சில இருக்கின்றன என்பதற்குத்தான் இந்த விளக்கம்!

தலைக்கு மேலே கூரிய வாள்!

சமஷ்டி அரசுத் தத்துவத்துக்கு மாறான யோசனை

சென்னை, மார்ச் 25—

"சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் நடத்தை பற்றிய ஒழுங்கு விதிகள் குறித்து மத்திய அரசுக்கும்—தமிழக அரசுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

"சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்சள் மீது ஊழல் புகார்கள் வந்தால், அதை முதலமைச்சரே விசாரணை செய்யலாமென்றும், முதலமைச்சர் மீது ஏதாவது ஊழல் அல்லது குற்றப் புகார்கள் வந்தால் அதைத் தலைமையமைச்சர்-உள்துறை அமைச்சர் விசாரணை செய்ய வேண்டுமென்றும் மத்திய அரசு தன்னுடைய சிபாரிசில் தெரிவித்திருக்கிறது; இது, 'சமஷ்டி அரசு'க்குச் சொல்லப்பட்ட இலக்கணத்திற்கு மாறுபட்டதாக உள்ளது; 'சமஷ்டி அரசு'க்கு உள்ள 'சம தகுதி' நிலை, இதனல் பாதிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே 'இதை ஏற்றுக்கொள்வதற்கில்லை' என்று மத்திய அரசுச்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சி அரசு இருந்தால், ஒருவேளை இது ஏற்கக்கூடியதாக இருக்கலாம்; ஆனல் விரும்பியோ விரும்பாமலோ மத்தியில் ஒரு கட்சி அரசும்—மாநிலங்களில் வேறு ஒரு கட்சி அரசும் இயங்கும் நிலையில்—ஆங்கிலத்தில் கூறப்படுகின்ற பழமொழிபோல்—தலைக்கு மேலே கூரிய வாள் தொங்கிக்கொண்டிருக்க மாநிலத்தின் தலைவர் (முதலமைச்சர்) பணிபுரிய நேரிடும்! இது 'சம தகுதி' உள்ள சமஷ்டி அரசு தத்துவத்திற்கு விரோதமானதாகும்."

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில்)

சென்னை கண் மருத்துவமனை

உறுப்பினர் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மறுப்பு

சென்னை, மார்ச் 26—

"சென்னையில் உள்ள அரசினர் கண் மருத்துவமனை மிகவும் துப்புரவு அற்ற நிலையில் உள்ளதாகக் கூறப்படுவது சரியல்ல; கடந்த 8—2—68 அன்று நானே நேரில் அந்த மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டேன்;

(3-ம் பக்கம் பார்க்க)

வீர வரலாற்றுக்கு உரியவர்கள் நாம்!

எதிர்காலத்தை உருவாக்கும் தள நாயகர்களாக மாறவேண்டும்!

அண்ணா காட்டும் வழிசெல்வோம்-வெல்வோம்!

கலைக் கல்லூரி மாணவரிடை அமைச்சர் கருணாநிதி உரை

சென்னை, மார்ச் 25—

"நம்மை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லுகின்ற அறிஞர் அண்ணா அவர்கள் படத்தினைத் திறப்பதன்மூலம், அவர் பெற்றிருக்கின்ற பேராற்றலில் ஒரு றிசிதளவாவது நாமனைவரும் பெற்றாகவேண்டும்!

"இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர் எடுத்துக்கொண்ட நல்ல பல முயற்சிகளில், ஒரு சிறிதளவையாவது நாம் பெற்றிடவேண்டும்!

"நமது மொழிக்காக அவர் ஈடுபட்டு நடத்திய போராட்ட உணர்வை, ஒரு சிறுதளவாவது நாம் பெற்றிடவேண்டும்!

"அவர் கடைப்பிடித்து வருகின்ற நாகரீகத்தை, நாம் பேணிக் காத்திடவேண்டும்!

"தமிழகத்திலே அவர் உருவாக்கியுள்ள எழுச்சிக்கு அடையாளங்களாக நாமெல்லாம் இருந்திடவேண்டும்!

"தமிழ் மொழியில் அவர் உண்டாக்கிய மறுமலர்ச்சிக்கு, நாமெல்லாம் எடுத்துக்காட்டுகளாக இருக்கவேண்டும்!"

இவ்வாறு அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சென்னைக் கலைக் கல்லூரி 49-வது ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் கேட்டுக் கொண்டார்.

பரிசுகள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், அறிஞர் அண்ணா அவர்கள் உருவப் படத்தைத் திறந்துவைத்தும் பேசுகையில், அமைச்சர் கருணாநிதி அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:—

மலர்க் கரங்களா?

"'எல்லாப் பொறுப்புக்களையும், தமிழருடைய எல்லா உரிமைகளையும், தமிழகத்தின் எல்லா உரிமைகளையும் உங்கள் கரங்களில்—அதாவது தமிழக அரசின் கரங்களில் ஒப்படைத்திருக்கிறோம்' என்று மாணவத் தலைவர் கூறினார்.

இந்தப் பொறுப்புக்களைப் பெறுகின்ற தமிழக அரசின் கரம் இருக்கிறதே—அது மென்மையான ரோஜா மலர்க் கரமல்ல; ரோஜா மலர்க் கரம் போன்று மென்மையாகத் தோன்றினாலும், இரத்தத்திலே தோய்ந்த கரம் அது—தன்னுடைய உடலில் ஏற்பட்ட விழுப்புண்களைத் தடவித் தடவிப் பார்த்து. அதிலே கசிந்த இரத்தத்தில் தோய்ந்த கரம்! முப்பது ஆண்டுக் காலமாக நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் வீரக் கொடியேந்திய கரம்! சிறைக்குச் சென்று சித்திரவதை ஏற்றவர்களின் கரம்! பாதுகாப்புச் சட்டங்களைச் சந்தித்தவர்களுடைய கரம்! பாளையங்கோட்டைக்குச் சென்றவர்களுடைய கரம்! அடக்குமுறைகளை அனுபவித்தவர்களுடைய கரம்! தீக்குளித்த தியாகிகளின் காலடிகளைத் தொட்டுக் கும்பிட்ட கரம்!

ஆகவேதான் நீங்கள், 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து—அதனை அவன் கண் விடல்' என்ற குறளுக்கேற்ப எங்களிடம் பொறுப்புக்களை விட்டிருக்கிறீர்கள்!

தும்பைவிட்டு வாலை பிடிக்கும் நிலை இது!

பலபேருக்கு இப்போது தமிழ் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது—வரவேற்கவேண்டிய உணர்ச்சி!

'ஒரு மொழிக்கு ஆதிக்கம்—அதுவும், தமிழைத் தாழ்த்துகின்ற அளவுக்கு ஓர் அரசு சட்டிலா? அப்படி கயாரு செல்வாக்கா? இருக்கலாமா?' என்ற கேள்வி, எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் கிளம்புகிறது! அது, தரமான கேள்வி! ஆனால் தும்பை விட்டுவிட்டு வாலை பிடிக்கின்ற நிலை இது!

வீர வரலாற்றுக்கு உரியவர்கள் நாம்!

தமிழ் உணர்ச்சி—தமிழுக்காகத் தன்னைத் தியாகம் செய்கின்ற உணர்ச்சி—அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் தோன்றியிருக்கிற பொற்காலம் இது!

மொழிக்காக 30 ஆண்டுக் காலம் ஒரு போராட்டம் உலக வரலாற்றில்—ஒரு நாட்டில் நடைபெற்றிருக்க முடியாது! அப்படி நடைபெற்றிருந்தாலும், அதற்கு முப்பது ஆண்டுக் கால வரலாறு இருந்திருக்க முடியாது!

அப்படியே இருந்திருந்தாலும் அதிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறைப்பட்டிருக்க முடியாது!

அப்படிச் சிறைப்பட்டிருந்தாலும்—மாணவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்க முடியாது!

அப்படி வீழ்ந்திருந்தாலும், எட்டுப்பேர் தங்கள் அன்புத் தாயை—ஆருயிர் மனைவியை—அருமைக் குழந்தையை மறந்து தங்கள் உடலுக்குத் தீயிட்டுக் கொண்ட பொற்கால வரலாறு வேறெங்கும் இருக்க முடியாது!

அப்படிப்பட்ட வீர வரலாற்றுக்கு உரியவர்கள் நாம்!

ஆகவே, நாம் உணர்ச்சி வடிவங்களாக இல்லாமல்—எதிர்காலத்தை உருவாக்குகின்ற தள நாயகர்களாக மாறவேண்டும்!

அந்தத் தள நாயகர்கள், இலக்கிய நாயகர்களாக—சரித்திர வல்லுநர்களாக — விஞ்ஞான வித்தகர்களாக அமையலாம்!

பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டோம் நாங்கள்; 'தமிழகத்தின் நல்வாழ்வுக்கு ஆற்றுகின்ற கடமைகளைப் பொன் போல் காப்பாற்றி ஆற்றவேண்டும்' என்று அறிவுரையாக அல்ல—வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

அது மட்டுமல்ல; இங்கே பரிசு பெற வந்தவர்கள் பரபரப்பு காட்டியதால், படிகளில் தவறி விழுந்ததைப் பார்த்தோம்! ஆகவே பரபரப்பு—படபடப்பு—பதைபதைப்புக்கு ஆளாகாமல் இருக்கவேண்டும் என்பதும் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைகளில் ஒன்று! அதன்படி நடப்போம்—வெல்வோம்!"

திருமலைநாயக்கன் மகால் புதுப்பிக்கப்படும்

அங்குள்ள அலுவலகங்கள் புதிய கட்டிடத்திற்கு மாறும்

சென்னை, மார்ச் 26—

"மதுரையில் உள்ள திருமலை நாயக்கன் மகாலைப் பழுது பார்த்து, அழகு கெடாமல் பாதுகாக்கச் சில இலட்சரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

"நீதி மன்றத்துக்காக இப்பொழுது கட்டப்படும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் திருமலைநாயக்கன் மகாலில் உள்ள நீதிமன்றம் அங்கு மாற்றப்படும்; அதன் பிறகு, மகாலைப் பழுது பார்க்கும் வேலை நடைபெறும்"

என்று, சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன், சட்டமன்றக் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இப்போது திருமலை நாயக்கன் மகாலில் உள்ள எந்த அலுவலகமும் மாற்றப்படவில்லை"

என்று, மற்றொரு கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

மதுரை நீதிமன்றக் கட்டிடப் பணி விரைந்து நடந்து வருவதாகவும், கடந்த ஜூன் மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு இப்போது அடித்தளக் கட்டிடம் முடிந்திருப்பதாகவும், விரைவில் கட்டி முடிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

மின்சாரத்துறையில் சிக்கனச் சீரமைப்பு

வேலை இழந்தவர்களுக்கு மாற்று வேலை

சென்னை, மார்ச் 26—

"தமிழக மின்சாரத் துறையில் 7½ சதவிகிதச் சிக்கனச் சீரமைப்பு செய்யவேண்டும்' என்ற பரிந்துரைக் கேற்ப, 14 உதவியாளர் பதவியும், 14 எழுத்தர் பதவியும் நிரப்பப்படவில்லை; 6 உதவியாளர்களும், ஒரு எழுத்தரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்; 1035 தொழிலாளர்களில் 80 பேர் நிறுத்தப்பட்டனர்; மற்றவர்களுக்கு மாற்று வேலை தேடிக் கொடுக்கப்பட்டது. வேலை இழந்தவர்களுக்கு தொழிலாளர் சட்டப்படி இழப்பீடு கொடுக்கப்பட்டது"

இத்தகவலை தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

மாம்பலத்தில் மாநகராட்சி அமைக்கும் சுரங்கப் பாதை

செலவில் பாதியை மாநில அரசு ஏற்கும்

சென்னை, மார்ச் 26—

"பழைய மாம்பலத்தில் உள்ள 'லேக் வியூ' சாலையையும்—புதிய மாம்பலத்தில் உள்ள துரைசாமி சாலையையும் இணைக்கும் சாலையின் இடையே இருக்கும் இருப்புப் பாதையின் அடியில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"முதலில் 9 அடி உயரத்துக்கு இந்தச் சுரங்கப் பாதையை அமைக்கலாமெனத் திட்டமிடப்பட்டது; பிறகு, 12 அடி உயரத்துக்குக் கட்டினால் பேருந்துகளும் அந்த வழியே செல்ல வசதியாக இருக்கும் எனக் கருதப்பட்டு, அதன்படி செலவு மதிப்பீடு திருத்தப்பட்டது. ரூ. 25 இலட்சம் இதற்குச் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு பாதியை மாநகராட்சியும், மறு பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டு, கட்டும் வேலை மாநகராட்சியிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

"இதற்காக சென்ற ஆண்டு ரூ. 35 000 மாநகராட்சிக்குக் கொடுக்கப்பட்டது. அதேபோல் இவ்வாண்டும் கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"ஏற்கனவே ரூ. 38,690 மதிப்புச்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இரு பக்கமும் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியுள்ளது."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனை, தூய்மையாகவே காணப்பட்டது; துர்நாற்றம் எதுவும் வீசவில்லை"

என்று, மருத்துவத்துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சட்டமன்றத்தில், கே. விநாயகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

மாவூர் 'கேரோ'வுக்கு மாநிலம் கொடுக்கும் விலை

பிர்லாவின் கேரளத் தொழிற்சாலைகள் இடம் பெயரும்?

"ரூ. 2 கோடி அளவில் அடுத்த மாதம் கேரளத்தில் தொடங்கப்படவிருந்த, 'ஃபைபர்' தொழிற்சாலை ஒன்றினை நிறுத்திவிடுவதென பிர்லா நிறுவனம் முடிவு செய்திருக்கிறது"

என்று, பிர்லா கூட்டு அமைப்புக்களின் பிரதிநிதி டி. பி. மண்டேலியா திருவனந்தபுரத்தில் கூறியிருக்கிறார்.

பிர்லா நிறுவனத்துக்குச் சொந்தமான மாவூர் குவாலியர் ரேயான்ஸ் தொழிற்சாலையில் நடந்த 'கேரோ'வின் 'உடனடி விளைவு இது' என்று நம்பப்படுகிறது!

கேரளத்தில், பிர்லா நிறுவனங்கள் சந்தித்துவரும் தொழில் அமைதியின்மை குறித்து முதலமைச்சரிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தனி விமானம் ஒன்றில் வந்த மண்டேலியா, நம்பூதிரிபாடு காட்டியிருக்கும் பிரதிபலிப்புகள் பற்றி நம்பிக்கை இழந்த நிலையில் இருப்பதாகத் தெரிகிறது!

இதனால், கேரளத்தில் உள்ள பிர்லா நிறுவனங்களையெல்லாம் வேறு இடத்துக்குக் கொண்டு செல்லும் ஓர் எண்ணம்கூட, பிர்லா தலைமைக்கு இருப்பதாகத் தெரியவருகிறது.

அடுத்த மாதம் துவங்கவிருக்கும் ரூ 2 கோடி முதலீடுகொண்ட 'ஃபைபர்' தொழிற்சாலைகளுக்காக எல்லா அடிப்படை வேலைகளும் முடிந்த நிலையில் இருந்தாலும், மாவூர் ரேயான் தொழிற்சாலை 'அனுபவ'த்தின் காரணமாக இந்தப் புதிய தொழிற்சாலையை கேரளத்தில் தொடங்குவதில்லை என்ற முடிவுக்கு பிர்லா தலைமை முடிவு செய்துள்ளது.

"தொழில் அமைதி பற்றி முதலமைச்சர், உறுதியான கருத்து ஆதரவு தெரிவிக்காததே இதற்குக் காரணம்" என, மண்டேலியா கூறியிருக்கிறார்.

மாவூர் 'கேரோ' பற்றி முதலமைச்சர் வருத்தம்கூடத் தெரிவிக்காதது பற்றி மண்டேலியா வருத்தமுற்றிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் பிர்லா நிறுவனம், மாவூர் நிலைமைகள் பற்றி மத்திய அரசிடம் தொடர்பு கொண்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோருக்கு படிப்பு உதவிப் பணம்

வருமான வரம்பை மேலும் உயர்த்த இயலாது

சென்னை, மார்ச் 26—

"தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு படிப்பு உதவிப் பணம் வழங்குவதில் பெற்றோர்களின் ஆண்டு உச்ச வருமானம் ரூ. 1,500 என்றிருந்ததை, ரூ. 2,000-ஆக உயர்த்தியுள்ளோம்; இதுவே புரட்சிகரமான செயல்தான்; மேலும் ரூ. 3,000 என உயர்த்த வேண்டும் என்ற ஆலோசனை இருந்துவருகிறது; ஆனால் தற்போதுள்ள நிதி நிலைதான் இடந்தரவில்லை; நிதி நிலை சீரானதும் இந்த வரம்பை உயர்த்துவது பற்றி யோசிக்கலாம்"

என்று, தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

துணைக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:—

"மத்திய அரசு, மாதம் ரூ. 300 என்று வரம்பு விதித்திருப்பதையும் உயர்த்த இந்த அரசு சிபாரிசு செய்யும்.

"மாநில அரசு வழங்கும் உதவிப் பணம், எல்லாத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குமே சமூக அடிப்படையில்தான் வழங்கப் பட்டுவருகிறது. மத்திய அரசு வழங்கும் உதவிப் பணம்தான் வருமான அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

"மத்திய அரசின் உதவிப் பணம், பிற்பட்ட வகுப்பினருக்கு மாதம் 300 ஆகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மாதம் ரூ. 500-ஆகவும் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறது.

"வருமானம் என்பது, ஒருவருடைய சம்பளத்தை மட்டும் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படவில்லை; பல வழிகளிலும் பெற்றுவரும் எல்லா வருமானத்தையும் சேர்த்துத்தான் கணக்கிடப்படும்."

தமிழரசுக் கழக மாநில மாநாடு

சென்னை மாவட்ட தமிழரசுக் கழகக் கூட்டம், 17-3-68 அன்று திரு அ. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, மே 4, 5-ம் நாட்களில் தமிழரசுக் கழக 5-வது மாநில மாநாட்டை சென்னை நகரில் சிறப்பாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பின்வரும் வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது:— தலைவர்: அ. பாலகிருஷ்ணன்; துணைத் தலைவர்: கெ. கு. பார்த்தசாரதி; செயலாளர்கள்: சி. ஞானமணி, கொ. மோ. ஜனார்த்தனம், பெ. சு. மணி.

மாநாட்டுப் பந்தலில் தனியாக மாநில சுயாட்சி மாநாட்டையும், தமிழரசுக் கழகப் பெண்கள் மாநாட்டையும் நடத்துவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் கலந்துகொள்ள தமிழக அமைச்சர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும், வெளி மாநிலங்களிலிருந்து அறிஞர்கள் பலரும் அழைக்கப்படுவார்கள்; இரு நாட்களும் கலை நிகழ்ச்சி இடம்பெறும்.

மதுரை ஆலை எழுத்தர் சங்கம்

மதுரை ஆலையில் உள்ள எழுத்தர்களுக்கும் கம்பவுண்டர்களுக்குமாக, 'மெஜூரா மில்ஸ் எழுத்தர்கள் முன்னேற்ற சங்கம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது; கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—

தலைவர்: எஸ். அக்கினிராசு பி.ஏ., எம்.எல்.ஏ.; துணைத் தலைவர்: எம். சுப்பாராசு; செயலாளர்: ஏ. கே. சிவசாமி; துணைச் செயலாளர்: டி. கோவிந்தராசன்: பொருளாளர்: டி. குப்புச்சாமி; செயற்குழு உறுப்பினர்கள்: தேவதாசன், முத்துக்குமாரசாமி, எஸ். சண்முகவேலு, நிசார் அகம்மது, எம். சண்முகவேலு.

'நீதி கிடைக்க அமைதி தேவை'

சர்வகட்சித் தலைவர்கள் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 26—

"முதலில் நகரில் அமைதி நிலைநாட்டப்படுவது இன்றியமையாததாகும்; பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமாயின் அமைதி நிலவுவது அவசியமாகும்; அமைதி கெடும் விதமாக—சொல்லாலோ செயலாலோ—எதனையும் எவரும் செய்யக்கூடாது எனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்; எங்களுடைய இந்த வேண்டுகோளை ஏற்று அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தும் துறையில் அனைவரும் ஒத்துழைப்பர் என நம்புகிறோம்"

என, மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் விடுத்துள்ள வேண்டுகோளில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

சென்னை மாணவர்கள்—பெருந்துத் தொழிலாளரிடையிலான தகராறினையொட்டி, அமைதி காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்க, அரசின் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்குப்பின் விடுத்துள்ள இந்த வேண்டுகோளில், முதலமைச்சர் உள்ளிட்ட 17-தலைவர்கள் கையொப்பமிட்டுள்ளனர். அவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"நடைபெற்ற துக்ககரமான நிகழ்ச்சிகள், எங்களைத் திடுக்கிடச் செய்துள்ளன.

"நிலைமை, மேலும் மோசமடையாமல் உறுதி செய்வது அனைவருடைய பொறுப்புமாகும்.

"அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் கடமையை அரசு வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால், மக்களின் எல்லாப் பிரிவினரின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்.

"'நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை நடத்தப்படும்' என்ற அறிவிப்பானது, 'நீதி வழங்கப்படல் வேண்டும் என்பதில், அரசு உறுதியாக இருக்கிறது' என்பதனையே காட்டுகிறது.

"இது, ஒரு கட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினையன்று; சமுதாயம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்சினையாகும்.

"வேண்டுகோளில் கையெழுத்திட்டுள்ள நாங்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றபோதிலும், அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதில் ஒற்றுமையாக இருக்கிறோம்; எனவே, அமைதியைக் காப்பதில் உதவி செய்யும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

"சட்டமன்றத்தில் முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கைக்கு, இந்த வேண்டுகோளில் கையெழுத்திட்டுள்ள எங்கள் அனைவருடைய முழு ஆதரவும் இருக்கிறது.

"எல்லாக் குடிமக்களும்—மாணவர்கள், தொழிலாளர்கள் உட்பட இச்சம்பவங்களுடன் தொடர்புள்ள அனைவரும்—இப்பிரச்சினையில் தங்களுடைய ஒத்துழைப்பை நல்குவர் என நம்புகிறோம்."

இந்த வேண்டுகோளில் கையொப்பமிட்டிருப்போர்:—

அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி; பி. ஜி. கருத்திருமன்—கே. இராஜாராம் (காங்கிரசு); ம. பொ. சிவஞானம் (தமிழரசுக் கழகம்); ஏ. கே. சுப்பையா (வலது கம்யூனிஸ்டு); என். சங்கரய்யா—வி. பி. சிந்தன் (இடது கம்யூனிஸ்டு); டாக்டர் எச். வி. ஹாண்டே (சுதந்தரா); முக்கையா தேவர் (பார்வர்டு பிளாக்); எம். சுரேந்திரன் (பி.சோ.); எஸ். பாலசுப்பிரமணியன் (ச.சோ.); கே. பி. எஸ். மணி (குடியரசு); டாக்டர் அபிபுல்லா பேக் (முஸ்லீம் லீக்); எஸ். கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் மேயர்).

தடையுத்தரவு

சென்னை நகரில் மாணவர்கள்—பேருந்துத் தொழிலாளர்கள் மோதுதலில் எழுந்துள்ள நிலைமையைக் கருதி நகரில் மார்ச் 26-ம் நாள் நள்ளிரவு முதல் ஏப்ரல் 5-ம் நாள் நள்ளிரவு வரையில், பொதுக்கூட்டங்கள்—ஊர்வலங்கள் முதலியவற்றை நகரப் போலீசு சட்டம் 41-வது பிரிவுப்படி போலீசு ஆணையர் தடை செய்துள்ளார்.

சமயச் சடங்குகள்—ஊர்வலங்கள் போன்றவற்றை இத்தடையுத்தரவு பாதிக்காது.

இந்தக் காலக் கட்டத்தில் பொதுக்கூட்டம் முதலியவை நடத்த விரும்புவோர் காவல்துறையினரிடம் தனி அனுமதி பெற வேண்டும்.

மறைந்த தொழிலாளர் குடும்பத்துக்கு அமைச்சர் காணிக்கை

சென்னை, மார்ச் 26—

"'என்னுடைய தோழன் ஒருவன் மறைந்தான்' என்ற உணர்வில் இருக்கிறேன்; 'என் சகோதரன் ஒருவன் மாண்டான்' என்ற சோக உணர்வில் இருக்கிறேன்.

"மறைந்த தோழன், என்னைவிட வயதில் மூத்திருந்தால் 'அண்ணன்' என்றும், என்னைவிட வயதில் குறைந்திருந்தால் 'தம்பி' என்றும் கருதி, அந்தத் தோழனின் குடும்பத்துக்கு எனது நான்கு மாதச் சம்பளமான இரண்டாயிரம் ரூபாயை அளிக்கிறேன்."

—மு. கருணாநிதி

(தலைமைச் செயலகத்தின்முன் கூடிய பேருந்துத் தொழிலாளரிடை)

கல்வி நிலையங்களுக்கு விடுமுறை அளிக்க உத்தரவு

நகரில் நிலவும் நிலைமையையொட்டி, சென்னையிலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் இன்றும் நாளையும் விடுமுறை தரும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

'ஐயா'வா —'அம்மா'வா?

(1-ம் பத்தி தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது, 'சமர் குகா' என்னும் பி. சோ. கட்சி உறுப்பினர், தலைவரை நோக்கி, 'ஐயா' என்று அழைத்து, பின்னர், 'அது தவறு' என்றும் உணர்ந்தார்!

பின்னர், 'அம்மையார் அவர்களே' என்று கூறி தவற்றைத் திருத்திக்கொண்ட சமர் குகா, அவசரத்தில் 'ஐயா' என அழைத்ததற்காக வருத்தம் தெரிவித்தார்!

ஆனால், தற்காலிகத் தலைமை ஏற்றிருந்த திருமதி இலட்சுமி காந்தம் அம்மையாரோ, 'இந்த இடத்தில் இருப்பதால், 'ஐயா' என அழைத்ததில் தவறு இல்லை—என விளக்கம் கொடுத்தார்!

அவையில் சில உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தலைவர் பதவியில் ஒரு பெண் இருந்தால் 'அம்மையாரே' என விளிக்கலாம் எனத் தெரிவித்தபோதும், இலட்சுமி காந்தம் அவர்கள் மேலும் விளக்கம் தெரிவிக்கும் வகையில்,

"அவைத் தலைவர் பதவி, 'பால்' வேறுபாடு இல்லாதது; எனவே, 'அம்மையார்' என்பதற்குப் பதில், 'ஐயா' என்றே அழைத்ததில் தவறு இல்லை"

என்று கூறினார்.

நடக்க இருப்பவை

28--3--68

சென்னை 41-வது வட்டம்

சத்தியவாணிமுத்து பொது நல மன்றச் சார்பில் செம்பியம் பாலார்டு வீதியில்; தலைவர்: ஏ. கே. சாமி; பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் எம் எஸ். சிவசாமி, இரத்தின சபாபதி, மற்றும் ஜி.ஆர். எட்மண்ட், மைனர் மோசஸ், நெல்லை நெடுமாறன், வி.எம். சுருளிவேலு, க. ல. கோவிந்தசாமி, எச்ஸ். டேவிட்.

பந்தநல்லூர்

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு கடைவீதியில்; தலைவர்: பொன். தருமன்; பேசுவோர்: கு. கோவிந்தராசன், பூராசாமி, பி.ஏ. லிங்கன், எஸ்.ஏ. துரை.

முகவரி

ஆ. குறள்பித்தன்,
ஆலங்குடியார் வீதி,
காரைக்குடி–1,
முகவை மாவட்டம்.

வெ. கண்ணன்,
வடக்கான் மறைநாடு,
செவல்பட்டி அஞ்சல்,
வெம்பக்கோட்டை (வழி),
சாத்தூர் வட்டம்.

8--4--68 மேலவைத் தேர்தல்கள்

கழக--கழக ஆதரவு பெற்ற வேட்பாளர் விவரம்

ஆசிரியர்கள் தொகுதி

சென்னை—செங்கற்பட்டு .... க. அறிவழகன் எம்.ஏ.

பட்டதாரிகள் தொகுதி

கோவை—நீலகிரி—சேலம்—தருமபுரி.... செ. அரங்கநாயகம் எம்.ஏ.பி.டி., பி.எல்.

தஞ்சை—திருச்சி .... வி. இராசகோபாலன் பி.ஓ எல்.

உள்ளாட்சித் தொகுதி

மதுரை—இராமநாதபுரம் .... பி. திருஞானம் (தி.மு.க.)

.... சவுந்தரராசன் (சுதந்தரா)

தஞ்சை .... கோ. சி. மணி

சேலம்—தருமபுரி .... ப. தா. முத்து

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குறிப்பு:—ஆங்காங்கு இணைந்து நிற்கின்ற தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுடைய பெயர் விவரம் பின்னர் வெளியிடப்படும்.

'கோ. சி. மணி, வி. இராசகோபால் வெற்றிக்கு உழைப்பீர்'

பெரியார் ஈ. வெ. ரா. வேண்டுகோள்

சென்னை, மார்ச் 25—

சட்டமன்ற மேலவைத் தேர்தலையொட்டி, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்:—

"தற்போதைய ஆளுங் கட்சியான தி.மு. கழகச் சார்பில் தஞ்சை மாவட்ட உள்ளாட்சி (ஸ்தல ஸ்தாபன)த் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திரு. கோ. சி. மணி, ஆசிரியர் தொகுதிக்கு வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வி. இராசகோபால் பி.ஓ.எல். ஆகிய இருவரையும் ஆதரிக்க வேண்டியது நமது கடமையாகும்.

"இன்றைய நிலையில் தி.மு. கழக ஆட்சியைப் பலப்படுத்தி, தமிழர்களுக்கு அதனால் பெரும் பயன் ஏற்படச் செய்ய வேண்டும் என்பதால் மேற்கூறிய தி.மு.க. அபேட்சகர்களுக்குக் கழகத் தோழர்கள் ஆதரவு தந்து, நல்லவண்ணம் வெற்றி பெறச் செய்யுமாறு தோழர்களை வேண்டிக் கொள்கிறேன்."

கயிறு திரிக்கும் தொழிற்சாலை

சென்னை, மார்ச் 26—

"தேங்காய் மட்டையைக் கொண்டு கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தஞ்சையில் துவக்குவதற்கு அரசு எல்லாவித ஊக்கமும் தருவதற்குத் தயாராக இருக்கிறது"

என்று, சட்டமன்ற மேலவையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பட்டுக்கோட்டையில்:

"கூட்டுறவு அல்லது தனியார் துறையில், பட்டுக்கோட்டையில் ஒரு கயிறு திரிக்கும் தொழிற்சாலையை துவக்குவதற்கு ஏற்கனவே ஒருயோசனை தெரிவிக்கப்பட்டது; ஆனால், அரசுத் துறையில் அதுபோன்றதோர் தொழிற்சாலையைத் துவக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது"

என்றும் தொழில் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

நிகழ்ச்சிகள்

மார்ச் 27 மாலை 6-மணி: குரோம்பேட்டை இலட்சுமிபுரம்—பொதுமக்கள் வரவேற்பு.

மார்ச் 28 காலை 8-30 மணி: நெய்வேலி; 9 மணி: கம்மாபுரம் ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பும் புதுப்பட்டினம் அடிக்கல் துவக்க விழாவும்.

மார்ச் 29 காலை 10 மணி: கோவை—மாவட்ட கால்நடை கருத்தரங்கு; மாலை 3-மணி: விவசாயக் கல்லூரி ஆண்டு விழா.

அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

சுற்றுப்பயணம்

மார்ச் 29 காலை 8-30 மணி: உடுமலைப்பேட்டை—நகராட்சி வரவேற்பு; 9 மணி; சீரணிப் படையினரால் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தல்; 11 மணி: கோவை ஸ்டேன்ஸ் மில் திருமண மண்டபத்தில் நடைபெறும் மாவட்ட கால்நடை கருத்தரங்கில் கலந்து கொள்ளல்.

பத்திரப் பதிவுத்துறையின் பணி

அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, மார்ச் 26—

'பத்திரப் பதிவுத்துறை' என்ற இனத்தின்கீழ், 1968-69-ஆம் ஆண்டுக்கு ரூ. 82,29,100 ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, சட்டமன்றத்தில், சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் ஆற்றிய விளக்கவுரை வருமாறு:—

"பத்திரப் பதிவுத்துறை மிகத் தொன்மை வாய்ந்ததாகும்.

பெரும்பாலும் சொத்து உரிமைக்குத் தொடர்புடைய பத்திரங்களைப் பதிவு செய்வதும், பதிவு செய்த பத்திரங்களின் படிகளையும், அவைகளுக்கான குறிப்பேடுகளையும் பேணி வருவதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

இதன் மூலம் மிகச் சிறிய குறுநிலக் கிழாரும் அவரது நிலத்தில் அவருக்குள்ள உரிமையைச் சிறிதும் இடர்ப்பாடின்றி நிலைநாட்ட முடியும்.

அந்தந்தப் பதிவுத் துணை மாவட்டங்களிலுள்ள சொத்துக்கள் சம்பந்தமாய் பதிவு செய்வதற்காக வழங்கப்படும் பத்திரங்களைப் பதிவு செய்வதும், பத்திரங்களுக்கு நகல்கள் வேண்டும் என்று கேட்கும்போது அவற்றை வழங்குவதும், வில்லங்கச் சான்றிதழ்கள் அளிப்பதும் இத்துறையின் சிறப்பான பணிகளாகும். இவ்வாறு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்ட கட்டணங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

பத்திரங்களைப் பதிவு செய்யும் பொதுமக்களின் நலனுக்காக புதிய பத்திரப் பதிவுக்கிளை அலுவலகங்களைத் தேவையானபோது அரசாங்கம் தானாகவோ அல்லது பொதுமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கவோ ஆங்காங்கே திறந்து வருகின்றது.

இவ்வாறு, கிளை அலுவலகங்களைத் தொடங்குவதற்குக் கீழ்க்காணும் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

இந்தக் கிளை அலுவலகங்களுக்கு ஏற்படும் செலவு, அவைகளிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து ஈடு செய்யப்பட வேண்டும்.'

இவற்றைத் திறக்குமிடங்களில், சிற்றுண்டிச்சாலை—உணவகம்—அஞ்சல் நிலையம்–போக்குவரத்து வசதி–அலுவலகத்திற்கும் பணியாளர்களுக்கும் இடவசதி போன்ற பல வசதிகள் அமைந்திருக்க வேண்டும்.

இதன் முடிவான நோக்கம், பொதுமக்களுக்குப் பெருமளவு பலனைக் கொடுத்து, அவர்களின் தொல்லையைக் குறைப்பதாகும்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.